1978 செப்டம்பர் 12] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இந்தச் சூழ்நிலையில் நான் இன்னும் இங்கே பல பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டும், இப்போது மணி 7-30 ஆகிறது (குறுக்கீடு) நான் இன்னும் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டியிருப்பதாலும், எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் சில கருத்துக்களைச் சொல்லுவதற்குத் தயாராக இருப்பதாலும், நான் அதற்கும் பதில் சொல்ல வேண்டி இருப்பதாலே, பேரவைத் தலைவர் அனுமதித்தால் நாளைய தினம் இந்தப் பதிலைத் தொடரலாம் என்றிருக்கிறேன். நாளைக் காலையில் நான் மேலவையிலே பதில் சொல்ல வேண்டியிருப்பதால் நாளை மாலை இந்த அவையில் என்னுடைய பதிலுரையைத் தொடரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அவசரமும், அத்தியாவசியமுமான மிக மிக முக்கியமான ஒரு செய்தியைத் தங்கள் மூலமாக நான் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். குடியாத்தம் நகரிலே இன்றைய தினம் பகல் 11 அல்லது 12 மணிக்கு டௌன் பஸ் விட வேண்டும் என்பதற்காக வேண்டி, அந்த நகரிலே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளும் சேர்ந்து.......... .... (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

13. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*91. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்திற்கான விதிகளை வகுப்பது குறித்த தொழில் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் தேதியிடப்பெற்ற 392-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

† 35. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1978).